மாபெரும் இன்னிசைவிழா
அருள்இசைமுரசு
நாகூர்
E. M. ஹனிபாவின்
இசைக்கச்சேரி
17-02-80 ஞாயிறுமாலை
ஜின்னா மைதானம்
அனைவரும் வருக,
விபரங்களுக்கு:
பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 6

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 மாசி 3 ரபி-அவ் 27 இதழ் 5
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-2-80

சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில்
சந்தி)
238 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள்

## மேலும் ஒரு புதிய அமைச்சு

(கொழும்பு)

**அமைச்சரவையில் நேற்று பல மாற்றங்கள் செய்யப்பட்டன.**

பெரும் மாற்றங்களைச் செய்து கொண்ட ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இப்போதுள்ள அமைச்சுப் பொறுப்புக்களுடன், உயர்கல்வி, அரசாங்க பெருந்தோட்டம், மற்றும் ஜனதா அபிவிருத்தி அமைச்சின் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தற்போதுள்ள அமைச்சுப் பொறுப்புடன், நெடுஞ்சாலைகள் அமைச்சர் பதவியையும் ஏற்றுள்ளார். அதே நேரத்தில் புதிதாக, மின்சக்தி எரிபொருள் அமைச்சு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### 35 அமைச்சர்கள்

நேற்றுஇடம்பெற்ற அமைச்சரவை மாற்றங்களுடன் மொத்தம் முப்பத்தைந்து (35) அமைச்சுக்கள் இப்பொழுது இயங்குகின்றனர்.

அதேநேரத்தில் அமைச்சரவையில் அங்கம்வகிக்காத ஐந்து அமைச்சர்களும் இடம் பெற்றுள்ளனர். இவ்விதமாக புதிதாகசுதேச வைத்தியஅமைச்சராக திரு. தர்மசேன ஆட்டிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சு மாற்றங்களின் முழு விபரமும் வருமாறு:-

● ஜனாதிபதிஜே'ஆர்.ஜயவர்த்தன தற்போது வகிக்கும் பாதுகாப்பு அமைச்சர், திட்ட அமுலாக்கல் அமைச்சர் ஆகிய பதவிகளுடன், புதிதாக உயர் கல்வி, அரசாங்க பெருந்தோட்ட மற்றும் ஜனதா தோட்ட அபிவிருத்தி அமைச்சுக்களின் பொறுப்புக்களையும் ஏற்றுள்ளார்.

● பிரதமர் ஆர். பிரேமதாசா தற்போது வகிக்கும் உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பதவியுடன், புதிதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

● மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரமா தற்போது வகிக்கும் பொது நிர்வாக அமைச்சர் பதவியுடன் புதிதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

● திரு.டி.பி. விஜயதுங்கா தற்போது வகிக்கும் தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் பதவியுடன் புதிதாக, புதிய அமைச்சான மின்சக்தி, எரிபொருள் துறையின் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

● திரு. கே.டபிள்யூ, தேவநாயகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

● திரு. நிஸங்கா விஜயரத்ன நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

● திரு. ரணில் விக்கிரமசிங்கா. தற்போது வகிக்கும் இளைஞர் விவகார, வேலை வாய்ப்பு அமைச்சர் பதவியுடன், புதிதாகக் கல்வியமைச்சர் பதவியையும் பொறுப்பேற்றுள்ளார்.

ஏனைய அமைச்சர்களின் பதவிகளில் மாற்றங்கள் இல்லை

### பிரதி அமைச்சர்கள்

புதிய அமைச்சுக்களின் பிரதி அமைச்சர்களாக நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

● திரு. பேர்ஸி சமரவீர- உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

● திரு. அலித் அலுவிகார- தோட்டத்தொழில் அமைச்சு.

(6-ம் பக்கம் பார்க்க)

## ● சூரிய கிரகணம்

(கொழும்பு)

எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு பின்னர் மற்றுமொரு சூரிய கிரகணம் நாளை பிற்பகல் ஏற்படுகிறது!

சூரியனை முழுமையாக மறைக்கும் இக் கிரகணம், ஒரு பூரண கிரகணமாகத் தோன்றிய போதிலும், இலங்கையைப் பொறுத்த வரை முழுமையான சூரிய இருட்டடிப்பு நடைபெற மாட்டாது என்று தெரிவிக்கும் வானிலை அவதான நிலைய அதிகாரிகள்; பொது மக்கள் இக் கிரகணத்தை எவ்விதமாகவும் பார்க்கக் கூடாதென்று எச்சரித்துள்ளனர்.

இலங்கையைப்பொறுத்த வரை பிற்பகல் 2-26மணிக்கு கிரகணம் தோன்ற ஆரம்பித்து மாலை 4-49 மணிக்கு முடிவடையும். இக்கால வேளையில், சூரியன் ஆகக் கூடியளவு புலப்படாமல் போகும் உச்சநிலை 3-42 மணிக்கு ஆகும்.

இந்தியாவின் உச்சநிலை, பிற்பகல் 3-39 மணி முதல் 3-56 மணிவரையாகும்

இக் கிரகணத்தின் 'வேகம்', மணித்தியாலத்துக்கு ஆயிரத்து அறுபது மைல்களாகுமென்று விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளனர்!

ஆனைக்கோட்டை கொள்ளை வழக்கு

## 2-ம் எதிரி வரவில்லை; விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை கொள்ளை வழக்கு, யாழ்.மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் எடுக்கப்பட்டு ஜூன் 2ந் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில், ஆனைக்கோட்டையில் 77ஆகஸ்ட் 24ம் தேதி க. குணரத்தினம் என்பவரது வீட்டில் 28,350 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாக ச.மதிவதனன், என். சந்திரராசா, இ. பத்மராசா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா ஆஜரானார். 2ம் எதிரி நேற்று நீதிமன்றத்திற்கு வரவில்லை.

நீதிபதிவிசாரணையை ஜூன் 2ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கோண்டாவில் கொள்ளை:

## பிணையில் நின்றவருக்கு மீண்டும் றிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பிணையில் நின்ற எதிரியை மீண்டும் ரிமாண்டில்வைக்கும்படி யாழ். மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் கட்டளையிட்டார்.

கோண்டாவிலைச் சேர்ந்த ம.சரோஜினிதேவியின் வீட்டு யன்னலை உடைத்துக் களவு எடுக்கும்நோக்கமாக உள்ளே சென்று அவருக்குச் சொந்தமான 22,175 ரூபா பெறுமதியான தங்கநகைகள் உடைகளைத் திருடியதாக நான்குபேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிணையில் சென்றிருந்த 1வது எதிரியை மீண்டும் ரிமாண்டில் வைக்கும்படி கட்டளையிட்ட நீதவான், அவருக்கு பிணை நின்ற அவரது மாமியாரான பாக்கியத்திடம் திருப்பிப் பிணையை எடுக்குமாறு தெரிவித்தார்.

எதிரிகளான செல்வேந்திரன், சுப்பிரமணியம், செல்வரத்தினம் கோகிலராசா ஆகியோர் நேற்று கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டனர்.

2ம் 4ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கம் 2ம் 4ம் எதிரிகளை பிணையில் விடுமாறுசெய்த விண்ணப்பத்தை நீதவான் நிராகரித்து நான்கு எதிரிகளையும்இம்மாதம் 27ந் தேதி வரை றிமாண்டில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

(க)

## "ஈழநாடு" தேர்தல் போட்டி: பரிசுபெறுவோர் கவனத்துக்கு!

''ஈழநாடு'' பத்திரிகை நடத்திய தேர்தல்போட்டியில் பரிசு பெற்றுள்ள பலரது அவசர வேண்டுகோளுக்கிணங்க, பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் புதன்கிழமை 20-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரிசளிப்பு வைபவம் நாளை நடைபெறுவதாக நேற்றைய இதழில் அறிவித்திருந்தோம். ஆனாலும், நாளை பிற்பகல் இடம்பெறும் சூரியகிரகணத்தினால் ஏற்படும் அச்சத்தைத் தொடர்ந்து இவ்வைபவத்தை ஒத்திவைக்குமாறு பலர் கோரியுள்ளனர்.

பரிசளிப்பு வைபவம் 20-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். பரிசுக்குரியவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

-ஆசிரியர்

இலங்கை பல்கலைக்கழக
சட்டமுதற்பரீட்சை 1980
(1 st in Laws)
1980 யூலை மாதம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றவிருப்பவர்களுக்கும், கடந்தவருடம் சித்தியடைத்தவறிய மாணவர்களுக்குமான விசேட மீட்டல் வகுப்புக்கள் 1980 மார்ச் 1ஆம் திகதி தொடக்கம் பின்வரும் விரிவுரையாளர்களால் எமது நிறுவனத்தில் வார இறுதி நாட்களில் நடாத்தப்படும்,
பொ. கயிலாசநாதன் B. A. (cey) L. L. B.(cey) Attorney-at-Law
வே. லாதீஸ் லோகநாதன் L. L. B. (cey)
த. தமிழ்மாறன் L. L. B. Hons (cey)
விபரங்கட்கு;
ACCOUNTANCY,
57, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குதூகல ஆரம்பம்! இன்றே விஜயம் செய்யுங்கள்!!
சகல வசதிகளுடனும் புதுமெருகூட்டப்பட்ட நிலையில்
புதிய நிர்வாகத்தினரால் நடாத்தப்படுகிறது.
0 சகலவிதமான சைவ உணவு வகைகள்
0 குளிர் பானங்கள் 0 சாய்ப்புச் சாமான்கள்
0 உள்நாட்டு, வெளிநாட்டு பிஸ்கட் வகைகள்
மற்றும் எப்பொருள்களாயினும் பெற்றுக்கொள்ள
சிறந்த சைவ ஹோட்டல்.
(ஆடர்கள் உடன் கவனிக்கப்படும்)
அசோக் பவான்
(சைவ ஹோட்டல்)
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4963

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் பெரியகடையில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிற்கு நல்ல நம்பிக்கையும், நல்லொழுக்கமும், நல்லதேகசுகமும் ஓரளவு ஆங்கிலம் எழுத, வாசிக்க நன்கு பேசத்தெரிந்தவருமான பெண் விற்பனையாளர்கள் தேவை. நகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் 25-2-80க்கு முன் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 4966, C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 4966

பூநகரி குறிச்சியைச் சேர்ந்த கிராஞ்சியில் தென்னந்தோட்டத்தில் வேலைசெய்ய ஆள் தேவை. (மாதச் சம்பளம்) 'தைரியஸ்தான்' 10-ம் நம்பர் செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் விபரம் அறியலாம். 4953

அச்சுத்தாள்கள் மடிப்பதற்கு ஆட்கள் தேவை. (இரு பாலாரும்) சுன்னாகம் அல்லது அயலூரவர் விரும்பத் தக்கது. நேரில் வரவும். திருமகள் அழுத்தகம், சுன்னாகம். 4962

வார்ப்பு வேலையில் (Moulding) 32 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள தொழிலாளர் உடன் தேவை. சான்றிதழ்களுடன் 16-2-80 சனிக்கிழமை காலை 10-00-12-00 மணிக்கிடையில் நேரில் வரவும். யூனிக்குறே சிக்மா, நாவற்குழி. 4967

### விற்பனைக்கு

தென்னைமரங்களுடன் உள்ள 9 பரப்புக் காணி கண்டி வீதியில் நுணாவிலுக்கும், கைதடிக்கும் இடையில் எட்டாம் கட்டையடியில் உடன் விற்பனைக்குண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும், இ. தி. செல்லையா, மே/பா, நாகரட்னம் அன் கோ., 62, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4964

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலடி என்னும் இடத்தில் இருக்கும் 3½ பரப்புக் காணியும், [கட்டிடம் கொஞ்சம் குறைவாக இருக்கும்] கிணறு, கக்கூஸ் சரியான முறையில் இருக்கிறது. விரும்பியவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு கடித மூலமோ, நேரிலோ சந்திக்கவும். உரிமையாளர், சோ. புண்ணிய மூர்த்தி, மன்னம்பிட்டி. 4957

### சோதிடம்

கல்வி, திருமணம், உத்தியோகம், தொழில், வெளியூர் செல்லுதல் முதலிய பிரச்னைகள் தீர்த்து வைக்கப்படும். குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. KL. M. Krishnapillaiy, ஸ்ரீஆதிபராசக்தி சோதிட நிலையம், காங்கேசன்துறை பஸ் நிலையம், காங்கேசன்துறை. 4945

## அதிபருக்கு கட்டாயலீவு

(கொழும்பு)

பாணந்துறையிலுள்ள பிரபல பாடசாலையின் அதிபர் கட்டாயலீவில் செல்லுமாறு கல்வித் திணைக்களத்தினால் பணிக்கப்படுள்ளார்.

பாடசாலைப் பணத்தை தவறான வழியில் பயன்படுத்திய தன் காரணமாகவும், தவறான நடத்தையினாலுமே அவர் கட்டாய லீவில் அனுப்பப் பட்டதாக கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவ் அதிபரின் நடத்தை பற்றிப் பாணந்துறைப் பொலிசாருக்கும் பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (வெ)

'தேடப்படுகிறார்கள்' சுவரொட்டி பற்றி

# பொலிசாரிடம் கேட்பதாகப் பிரதமர் சபையில்கூறினர்

## நல்லூர் 'சிவா' சாட்சியம்

(கொழும்பு)

''தேடப்படுகிறார்கள்'' என்ற சுவரொட்டிகளில் காணப்படுபவர்களின் இருப்பிடம் தெரிந்திருந்தும் ஏன் அவ்வாறான சுவரொட்டிகள் வெளியாகின? எனநான் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவை பாராளுமன்ற விவாதத்தின் போது கேட்டேன். அதைப்பற்றி நாம் பொலிசாரைக் கேட்க இருக்கிறோம். எனப் பிரதமர் பதிலளித்தார்.

தேவைப்படும் இளைஞர்களின் இருப்பிடங்கள் மற்றும் அவர்கள் பற்றிய விபரங்கள் குறித்து பொலிசாருக்கு தெரிந்திருந்தும் ''தேடப்படுகிறார்கள்'' என்ற சுவரொட்டிகளின் மூலம் அவர்களுக்கு அவமானம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு நல்லூர் எம். பி. சட்டத்தரணியுமான திரு. மு. சிவசிதம்பரம் கொழும்பு மாவட்ட நீதிபதி முன்னியில் நடைபெற்ற மானநஷ்ட வழக்கொன்றில் சாட்சியம் அளித்த போது கூறினர்.

காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், தம்பித்துரை முத்துக்குமாரசுவாமி, சபாலிங்கம் சபாரத்தினம், நடேசானந்தன் ஆகியோரே இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பவர்கள்.

இந்த ஐந்து மனுதாரர்களில் தம்பித்துரை முத்துக்குமாரசுவாமி தாக்கல் செய்திருக்கும் ஒரு லட்ச ரூபா நஷ்டஈடு வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது திரு. சிவசிதம்பரம் சாட்சியமளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:

''பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக தேடப்படுகிறார்கள் என்று சிலரின் புகைப்படங்களுடன் கூடிய சுவரொட்டிகள் 1978-ம் ஆண்டு மே மாதத்தில் ஒட்டப்பட்டன. அப்பொழுது அவர்களில் ஒருவரான தம்பித்துரை முத்துக்குமாரசாமியைக் கைது செய்ய உதவுமாறு பொலிசார் என்னிடம் கேட்கவில்லை. அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சமயம் தவிர வேறெப்போதும் அவரைக் காண்பது கஷ்டமாக இருக்கவில்லை.

பிரஸ்தாப சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட தினமான 1978ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி மனுதாரரான முத்துக்குமாரசாமி என்னுடன் கதைத்துவிட்டு இரவு மெயில் ரயிலில் யாழ்ப்பரணம் சென்றார்.

### வி. என். மூலம் பொலிசில் சரண்

தேடப்படுவதாக பிரஸ்தாப சுவரொடியில் அறிவிக்கப்பட்ட சிலர் கோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளையின் வீட்டில் ஒன்று கூடி சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மூலமாக பொலிசாரிடம் சரணடைந்தனர்.

மனுதாரரான முத்துக்குமாரசாமி சட்டக்கல்லூரியில் சேர்ந்திருந்தார். அவர் கொழும்பிலுள்ள தன் சகோதரியின் இல்லத்தில் 19-5-78 அன்று இருந்தார். அன்று அவர் தொலைபேசிமூலம் என்னோடுதொடர்பு கொண்டு பின்பு என் இல்லத்திற்கு வந்தார்.

சுவரொட்டியில் தனது படமும் ஒட்டப்பட்டுள்ளதாகவும், அதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும் அவர் என்னைக் கேட்டார். யாழ்ப்பாணத்திலுள்ள அவருடைய இல்லத்திற்குச் சென்று அங்கேயே இருக்குமாறு நான் அவருக்கு ஆலோசனை கூறினேன். அதன்படி அன்றே அவர் யாழ்ப்பாணத்திற்குச் சென்றார்.

### கோட்டை ரயில் நிலயத்தில்

19-ம் திகதி கோட்டைரயில் நிலயத்தில் ''தேடப்படுகிறார்கள்'' என்ற சுவரொட்டியைக் கண்டேன். அத்தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் பேசிக்கொண்டிருந்தபோது நான் இடையில் குறுக்கிட்டுப் பேசினேன். பிரதம மந்திரியுடன் இதுபற்றி அன்று கேட்டேன். ''அதை நாம் பொலிசாரிடம் விசாரிக்க இருக்கின்றோம்'' எனப்பிரதமர் பதிலளித்தார்.

இதன் பின்பு சுவரொட்டி விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் பொலிசாரிடம் கூட்டாகச் சரணடைந்தனர்.

அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. கே. பிரேமரத்தின, திரு. எம். சிவசிதம்பரத்தைக் குறுக்கு விசாரணை செய்தபொழுது அவர் தெரிவித்ததாவது:

மனுதாரரான முத்துக்குமாசாமியை இரு காரணங்களுக்காக பொலிஸில் சரணடையுமாறு கூறவில்லை.

முதல் காரணம் அவருக்கு அவ்வாறான ஆலோசனையை வழங்கியதற்கான பொறுப்பை நான் ஏற்கவிரும்பவில்லை.

மற்றது யார் முன் சரணடையச் செய்வது என்பதில் பிரச்னை இருந்தது. ஏனெனில் பொலிசாரிடம் சரணடைந்த இளைஞர்களுக்கு ஏற்பட்ட கதியையும் நான் ஏற்கனவே அறிந்திருந்தேன்.

வாலிபர்களின் இருப்பிடம் ஏனையோருக்குத் தெரிந்தால் அது பொலிசாருக்கும் தெரியவேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

பொலிசாரின் பொறுப்பு மிக அதிகம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

மனுதாரின் சார்பில் திரு. எஸ். நடேசன் கியூ.ஸி. ஆஜரானர். ...... (ம)

## சுவீப்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை தலைமை அலுவலகத்தில் இழுக்கப்பட்ட 764-வது இலக்க தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

**1-ம் பரிசு**
**16 V 0758**
**ரூபா 100, 000**

**2-ம் பரிசு**
**18 N 0470**
**ரூபா 40,000**

**3-ம் பரிசு**
**04 O 0981**
**ரூபா 100,000**

தலா ரூபா 1,633/65 பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0563 | 05 A 0275 |
| 13 A 0663 | 25 A 0347 |
| 29 A 0851 | 22 B 0973 |
| 28 C 0203 | 05 D 0833 |
| 15 D 07 5 | 02 E 0599 |
| 05 E 0033 | 26 E 0512 |
| 27 E 0119 | 28 E 0885 |
| 31 E 0761 | 32 E 0097 |
| 32 E 0 84 | 07 F 0328 |
| 08 F 0549 | 11 F 0693 |
| 22 F 0172 | 02 G 0305 |
| 24 G 0436 | 05 H 0009 |
| 07 H 0694 | 09 H 0027 |
| 18 H 0924 | 21 H 0103 |
| 27 H 0831 | 11 J 0835 |
| 12 J 0909 | 26 J 0086 |
| 28 J 0010 | 31 J 0228 |
| 11 K 0070 | 22 K 0206 |
| 33 K 0875 | 32 L 0712 |
| 16 M 06 7 | 20 M 0393 |
| 28 M 0661 | 04 N 0484 |
| 06 N 0046 | 07 O 0710 |
| 09 O 0971 | 23 O 0744 |
| 28 O 0533 | 32 O 0485 |
| 02 P 0380 | 02 P 0497 |
| 03 P 0157 | 05 P 0188 |
| 07 P 0090 | 21 P 0001 |
| 26 P 0270 | 26 P 0424 |
| 28 P 0273 | |
| 11 Q 0706 | 18 Q 0279 |
| 22 Q 0079 | 29 Q 0202 |
| 08 R 0950 | 09 R 0102 |
| 20 R 0176 | 22 R 0338 |
| 28 R 0493 | 29 R 0247 |
| 05 S 0238 | 05 S 0700 |
| 10 S 0196 | 12 S 0807 |
| 26 S 0188 | 01 T 0917 |
| 05 T 0644 | 07 T 0645 |
| 17 T 0569 | 20 T 0927 |
| 23 T 0201 | 24 T 0089 |
| 30 T 0222 | 08 U 0155 |
| 08 U 0681 | 17 U 0575 |
| 19 U 0843 | 26 U 0564 |
| 02 V 0464 | 02 V 0935 |
| 26 V 0827 | 12 W 0609 |
| 17 W 0570 | 20 W 0586 |
| 21 W 0516 | 12 X 0951 |
| 20 X 0516 | 07 Y 0812 |
| 08 Y 0606 | 29 Y 0034 |
| 29 Y 0667 | 25 Z 0410 |
| 26 Z 0558 | |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை.

## விருந்து

(உரும்பராய்)

உரும்பராய் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த இராப்போசன விருந்து நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மன்றத்தலைவர் சி. வரதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விருந்தில் செ.. இரத்தினசிங்கம் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர். (இ)

# சகலரக சுருட்டுகளுக்கும் 40 ரூபா கூலி!

## சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''சகல சுருட்டுத் தொழிற்சாலைகளும் இன்று முதல் வேலைஆரம்பிப்பதுடன் எத்தரவளியான சுருட்டுக்கும் கூலியாக 40 ரூபாசம்பளம் வழங்கப்படும்''

மேற்படி தீர்மானம் வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டம் நாவடியில் நடைபெற்றது. வண்ணை ஆனந்தன் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. செ. குமாரவேலு இச்சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு. குமாரவேலு பேசுகையில் கூறியதாவது:

''இச்சங்கம் முதலாளிகளினதும், தொழிலாளர்களினதும் நலனைக் கருத்தில் கொண்டே இயங்கும். கடந்த காலங்களில் சுருட்டுத் தயாரிப்பாளர்களுக்கெனத் தகுதியான ஒரு சங்கம் இல்லாததால் ஒருசில தொழிற்சங்கத் தலைவர்கள் சுரண்டப்பட்டுவந்துள்ளனர். வேலைநிறுத்தம் முதலான நடவடிக்கைகளினுல் தொழிலாளர்களும் தயாரிப்பாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். வேலைநிறுத்தம் நடைபெறும் காலங்களில் வேலைநடைபெறும் சுருட்டுத் தொழிற்சாலைகளுக்குச் சில போலித் தொழிற்சங்கத் தலைவர்கள் சென்று அங்கு வேலைசெய்த தொழிலாளர்களைத் தாக்கியும் புகையிலையை அள்ளி வெளியே கொட்டியும் பல தொல்லைகளைக் கொடுத்தனர். இன்று அங்குரார்ப்பணம் செய்யப்படும் தயாரிப்பாளர் சங்கம் நல்லமுறையில் இயங்குவதன் மூலம் தொழிற்சங்கத் தலைவர்களின் அட்டூழியத்திலிருந்து தொழிலாளர்களையும் தயாரிப்பாளர்களையும் காற்றமுடியும்.

''இச்சங்கத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய சகல சுருட்டுத் தயாரிப்பாளர்களும் 40 ரூபா கூலியை வழங்கவேண்டும். கடந்த காலங்களில் தயாரிப்பாளர்கள் தங்கள்விருப்பப்படி தாம் நினைத்த கூலியைத் தொழிலாளர்களுக்கு வழங்கி வந்தனர். ஆனல் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் சிலர் தொழிற்சங்கத் தலைவர்கள் என்று கூறிக்கொளும் ஒருசிலரின் தவருன வழி நடத்தலிற்குள்ளானுர்கள்.

### பழைய கதையை மறக்கக்கூடாது

''வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் ... சுருட்டுத் தயாரிப்பாளர்கள் ... வழங்கிய குறைந்த சம்பளத்தையே வழங்கி வருகின்றனர். அதனுல் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். இன்று சுருட்டுத் தயாரிப்பாளர்களாகவுள்ளவர்கள் எல்லோரும் தாமும் ஒருகாலத்தில் சுருட்டுத் தொழிலாளியாக இருந்ததை மறந்துவிடக்கூடாது. அன்றுபட்ட கஷ்டங்களை அவர்கள் உணர்ந்து செயல்படவேண்டும்.

### 15 ரூபா சம்பளம் பெண்கள் பெறுகிருர்கள்

துல்கிரியா, கம்பஹா, வியாங்கொடைபோன்ற இடங்களில் 15 ரூபா சம்பளத்தில் பெண்கள் சுருட்டுத்தொழில் செய்கிருர்கள். கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, மூதூர் ஆகிய பகுதிகளில் 30 ரூபா சம்பளத்தில் சுருட்டு வேலை நடைபெறுகிறது. அப்படியிருக்கும்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் 50 ரூபா சம்பளம் கேட்சப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஆகக்கூடுதலான கூலி வழங்கப்படுவதால் எமது சுருட்டை தென் பகுதியில் விற்பனைசெய்யமுடியாதநிலையில் இருக்கிறது. சம்பள உயர்வினுல் யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய தொழிலானசுருட்டுத்தொழில் பாதிக்கப்பட்டுவருகிறது. இந்நிலையை நாம் தொழிலாளர்களுக்கு நல்லமுறையில் எடுத்துச் சொல்வதன் மூலம் அழிந்து கொண்டிருக்கும் சுருட்டுத் தொழிலுக்குப்புத்துயிர்வழங்க முடியும்' (கொ-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கோடிமக்கள் பொய்யினராயிருந்தாலும் ஒரு பூரண மனிதனுல் அத்தனை பேரின் பொய்யையுமகற்ற முடியும்.

- மகாத்மாகாந்தி.

## மக்கள் கருத்து

### காங்கேசன் துறைமுக அபிவிருத்தி

இற்றைக்கு 30 வருடங்களுக்கு மேலாக வடபகுதி மக்கள் அரசினிடம் காங்கேசன்துறைமுக அபிவிருத்தி பற்றி வற்புறுத்திவந்தனர். ஏறக்குறைய இலங்கையின் அரைவாசிப்பகுதிக்குப் பயன்படக்கூடிய இத்துறைமுகத்தை துவேஷமனப்பான்மையால் அரசினர் பலதடவை தட்டிக்கழித்துவிட்டனர். இம்முறை செய்வோம், அடுத்தமுறை செய்வோம் என்று ஆசைவார்த்தை பேசி, வடபகுதி மக்களைமாத்திரமல்லாது மற்றவர்களையும் ஏமாற்றிவிட்டனர். தற்பொழுதும் அபிவிருத்தி செய்வதாகக் கூறுகின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் தலைவர்களும் இளைஞர் பேரவையும் வெளிநாட்டிலுள்ளவர்களும் மற்றும் வடபகுதித் தலைவர்களும் இக்குறையை வெளிநாட்டவர்க்கு விளக்கி அவர்களின் உதவியால் அரசினரை இத்துறைமுகத்தை இவ்வாண்டில் அபிவிருத்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

வடபகுதிப் புகையிரதச் சேவையை இரட்டைப்பாதை ஆக்குவதால் குறைந்தது 80 தொகுதிகள் இதனுல் பயன்படும். மக்கள் பொருள்களை வாங்குவதற்கு ஏற்ற வசதியும் நேரவசதியும் தொழில் முன்னேற்றமும் மற்றும் உல்லாசப் பிரயாணங்களுக்கும் இடமேற்படும். இதையும் தொடங்க ஆவன செய்ய மேற்குறிப்பிட்டவர்களை வேண்டுகிறேன்.

கடந்த காலத்தில் வடபகுதியில் இருந்து கிழக்கு மாகாணங்களுக்கும் மற்றும் இடங்களுக்கும் வள்ளம், வத்தை, சிறு கப்பல்மூலம் பொருட்களை ஏற்றி, மக்களுக்குச் சகல வசதிகளையும் செய்தார்கள். மீண்டும் அச்சேவையை ஏற்படுத்த ஆவன செய்ய முயலவேண்டும்.

இ. கந்தையா
பெரியகிணற்றடி,
அளவெட்டி.

### 23-ந் தேதி ஜி. ஜி. நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒழுங்கு செய்துள்ள அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் நினைவுக் கூட்டம் இம்மாதம் 23-ம் தேதி மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ். மேயர் திரு. இராசாவிஸ்வநாதன், சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், சபா செந்தில்ராசா, திரு. மதிமுகராசா, மாவை சேனுதிராசா திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் கூட்டணி எம். பிக்கள் உரை நிகழ்த்துவார்கள்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூட்டத்திற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார். (க)

### ஆசிரியர்கட்கு கடன் வசதி

(மட்டுநகர்)

ரூபா 525க்குக் குறைந்த சம்பளம்பெறும் உதவி ஆசிரியர்கட்கு இவ்வருடம் விசேட கடனுகை 300 ரூபாய் வழங்கப்படுகின்றது. கடன்பெற விரும்பும் ஆசிரியர்கள் ரூ. 525க்கு குறைந்த சம்பளம் பெறுபவர்களாக இருக்கவேண்டும். அத்தோடு 1977, 78, 79ம் ஆண்டுகளில் விசேட வங்கிக்கடன் பெருதவர்களாகவும் இருக்க வேண்டும்.

பத்துமாத தவணை அடிப்படையில் வழங்கப்படும் இக்கடன்வசதி கடந்தகாலங்களில் ஏனைய ஊழியர்கட்கு வழங்கப்பட்டது. ஆசிரியர்கட்கு வழங்கப்படவில்லை. இக்கடன் விண்ணப்பம் செய்துள்ள சகல ஆசிரியர்கட்கும் அடுத்த மாத, சம்பளத்துடன் வழங்கப்படும் எனத்தெரிய வருகின்றது.

......

### யாருடையது?

பிறவுண்வீதி, கலட்டியைச் சேர்ந்த வ. பாக்கியநாதன் என்பவரால்கலட்டிச் சந்தியில் கண்டெடுக்கப்பட்ட 7ஸ்ரீ6414 இலக்க யமாகா மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப் பத்திரம் 80ம் ஆண்டுக்குரிய அனுமதிப்பத்திரங்கள் ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (இ)

# கமநலச்சேவைகள் தேர்தல் திடீர் ஒத்திவைப்பு!

## ஊழல் காரணமா?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பரபரப்பான ஒரு சூழ்நிலையில்நடைபெற்றுக் கொண்டிருந்தகமநலச்சேவைகள் தேர்தல்கள் திடீரென ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் ஊழல்கள் இடம்பெற்றதாகக் கருதப்பட்டு, மாவட்டக் கமநல உதவிப் பணிப்பாளர் உட்பட மூன்று உத்தியோகத்தர்கள் கமநல ஆராய்ச்சி அமைச்சினுல் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள ஆறு கமநலச்சேவை நிலையங்களிலுள்ள 74 விவசாயப் பகுதிகளுக்கான கமநல சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல், இம்மாதம் நடைபெறுகிறது. பல பகுதிகளில் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துவிட்டன.

கொழும்பு கமநல சேவையாளருக்கும் அரசாங்க அதிபருக்கும் இத்தேர்தல் குறித்து விவசாயிகள் முறைப்பாடுகள் செய்திருந்ததைத் தொடர்ந்து கமநலசேவை ஆணையாளர் தந்தி மூலம் இத்தேர்தல்களை ஒத்திவைக்குமாறு, மட்டக்களப்பு உதவி கமநல பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

சின்னக்காலமடு பகுதியில் நடைபெற்ற தேர்தல் சட்டத்திற்கு முரண்பாடாக இருந்தது என்று தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்து இது குறித்துவிசாரணை நடத்த கமநல ஆராய்ச்சித்துறை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ரஞ்சன் விஜயரட்ண விசாரணை நடத்துவதற்காக மட்டக்களப்பிற்கு வந்துள்ளார். கமநல உதவி ஆணையாளர் திரு. ஏ. குமாரசிங்கம், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு.வி.நாகலிங்கம் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. எம். சாந்தலிங்கம்,ஆகியோர் விசாரணைக்குட்பட்டுள்ளனர். இப்பகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த அபேட்சகரான திரு கே. சிறிஸ்கந்தராஜா என்பவரே இவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, ஏனைய சில பகுதிகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் தவறுகள் இடம் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்துநடைபெற்று முடிந்த தேர்தல்களும் ஒத்திவைக்கப்படலாம் என அறியப்படுகின்றது.

## கூட்டணி எம். பிக்கள் நாளை மட்டுநகர் செல்கின்றனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி கிளைகளை புனரமைப்பு செய்வதற்காக, கூட்டணி எம். பி.க்கள், நாளை இங்கு விஜயம் செய்வார்கள்.

மட்டக்களப்பிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் கோஷ்டி வருவதாக, இங்குள்ள கூட்டணி பிரமுகர்களுக்கு இன்று தந்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோஷ்டியில்யாழ்ப்பாண எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், திருமலை எம். பி. திரு. சம்பந்தன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் இம்மாதம் 9ம், 10ம் தேதி மட்டுநகர் வருவதாக முன்னர் அறிவிக்கப்பட்டு பின்திடீரென இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இம்மாதம் 16ம் தேதி மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை காரியாலயத்தில், அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவை பொதுச் சபையினரை [illegible]ந்திப்பார்கள். தமிழ்பே[illegible]க்களும் இன்றுள்ள அ[illegible] சூழ்நிலையும் என்பதுபற்[illegible]கலந்துரையாடல் இட[illegible] என மட்டுநகர் தமி[illegible]ளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. வாசுதேவா தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கம், காசி ஆனந்தன் திரு. சம்பந்தமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

பட்டிருப்பு, கற்குடா தொகுதிகளில் வன்செயல் நடந்த இடங்களையும் இக்கோஷ்டியினர் பார்வையிடுவர். (க)

## பலித்தடைபோல் சாதிப் பிரச்னைகளையும்நீக்கவேண்டும்

### மட்டுநகர் இந்து மாணவர் கோரிக்கை

(மட்டக்களப்பு)

சைவ ஆலயங்களில் பலி கொடுப்பதை தடுக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டமை போல் சைவ ஆலயங்களில் நிலவு சாதிப்பிரச்னைகளைத் தீர்க்க இந்துக் கலாச்சார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மட்டுநகர் இந்துமாணவ பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் பேரவையின் செயலாளர் செல்வன் வே. லிங்கநாதன் கருத்தைத் தெரிவித்தார்.

பேரவையின் பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செயலாளர் மேலும் பேசுகையில், நாஸ்திகஞக இருந்து பல சைவ ஆலயங்களை தூக்கி எறிந்த அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை இன்று பொறுப்பான பதவி வகிக்கின்றார். அவரிடம் இந்து சமய விவகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் அமைச்சர் எடுத்து வருகின்ற தீர்மானங்கள் மிகவும் வரவேற்கத்தக்கதாகும். அகில உலக ரீதியில் ஏப்ரல் மாதம் கொழும்பில் நடைபெறும் இந்து சமய ஆராய்ச்சி மாநாடு மிகவும் வரவேற்கத்தக்கது. இத்தகைய மகாநாடு அமைச்சினுல் தான் உலக இந்து சமயத்தவர்கள் மத்தியில் முதல் தடவையாக கூட்டப்படுகின்றது.

கடந்த காலங்களில் நம் நாட்டு இந்து ஆலயங்களில் இரு பிரச்னைகள் நிலவி வந்து ஆலயங்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியது. ஒன்று ஆலயங்களில் பலி கொடுத்தல். இதனுல் ஆலயங்களில் இரு பிரிவினராகப் பக்தர்கள் பிரிந்தார்கள். பல ஆலயங்கள் மூடப்பட்டன. இந்நிலையில் அமைச்சர் பலி கொடுத்தலைத் தடை செய்தமை மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அடுத்தது குறிப்பாக எமது நாட்டில் குறிப்பிட்ட சில ஆலயங்களில் சிறுபான்மையினத்தவர் வழிபாடு செய்ய இடம் கொடுக்கப்படுவதில்லை. இது மிகவும் வேதனைக்குரிய செயலாகும். இதனை அமைச்சுச் சட்டம் மூலம் தடைசெய்ய முன்வர வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் பேரவையின் அமைப்பாளர் செல்வன் ம. வரதன் உட்பட உறுப்பினர்கள் கலந்து கொண்டு இதனை வரவேற்றுப் பேசினார்.

### மயிலிட்டி கலைமகள் ம. வி. பொருட்காட்சியும் கலைவிழாவும்

(பலாலி)

மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப் பட்டுள்ளதையிட்டுஇவ்வித்தியாலயஅதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், கி. மு. சங்கம், ச. ச. நிலையம், வாலிபர் சங்கம் ஆகியன சேர்ந்து விழாவொன்றை நடாத்தவிருக்கிருர்கள்.

இம்மாதம் 29ம் திகதி நடைபெறவிருக்கும் இவ்விழாவில் மாணவர், ஆசிரியர், கல்லூரி அபிவிருத்திச்சபையினர் ஆகியோரது கூட்டு முயற்சியினுலான பொருட்காட்சியொன்றும் காலையில் நடைபெறும் இப்பொருட்காட்சியை வடமாநில கல்வித்திணைக்கள கல்வி அதிகாரிகளான திரு. வீ. சிவசுப்பிரமணியம், திரு. டபிள்யூ. ஆர். அருளையா ஆகியோர் ஆரம்பித்து வைப்பார்கள். மாலை நடைபெறும் விழாவில் எதிர்கட்சித்தலைவர் திரு.ஏ. அமிர்தலிங்கம் தம்பதிகள்வடபகுதி கல்விப்பணிப்பா திரு. ரீ. மாணிக்கவாசகர் தம்பதிகள் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர். எதிர்க்கட்சித் தலைவர்அன்றைய தினம் புதிய கட்டிடம் ஒன்றையும் திறந்துவைப்பார். புதிய நூல்நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்படும். இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

......

### இடமாற்றம்

(சங்கானை)

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் வெளிக்கள உதவியாளராகக் கடமையாற்றிய திரு. பி. சூசைப்பிள்ளை பெரும்பாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று கனகராயன்குளத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (இ)

### ப. நோ. கூ. சங்க கிளைக்குழு இடைத்தேர்தல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை 27 ல் நடைபெற்ற ஐந்து கிளைக்குழு உறுப்பினர்களுக்கான இடைத்தேர்தலில் சுயேச்சைக்குழுவாகப் போட்டியிட்ட பின்வரும் ஐவரும் தெரிவு செய்யப்பட்டனர். சி. கதிரிப்பிள்ளை, மு. பொன்னம்பலம், சி. கோணர், ஐ. தர்மலிங்கம், த. கோபாலு.

இக் கிளைக்குழுவில் அங்கத்துவம் வகித்த உறுப்பினரில் ஒருவர் வயது தகுதியின்மை காரணமாகவும் ஏனைய நால்வரும் வேறு சில கார்ரணங்களிஞலும் தமது பதவிகளை ராஜினுமாச் செய்திருந்தனர் இவர்களில் மீண்டும் போட்டியிட்ட மூவரில் ஒருவரேனும் தெரிவு செய்யப்படவில்லை. இக்கிளை காங்கேசன்துறைப் பட்டினசபையில் முதலாம் வட்டாரத்தில் இயங்குகின்றது. (இ)

### மாணவ இயக்க விடுதி முகாம்

(அரியாலை)

கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் ஆதரவில் மாணவிகளுக்கான நான்கு நாள் விடுதி முகாம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண ஆர்ச்பீக்கன் வணக்கத்துக்குரிய சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளாரும், அருட்திரு. யே. சர்வானந்தம் அடிகளாரும், அருட்திரு. ஜோன். ஐசாயா அடிகளாரும் மாணவிகளுக்கு அருளுரை நிகழ்த்துவார்கள்.

### குறைந்தது

(கொழும்பு)

கொழும்பில் அரிசியின் விலை 4-50 சதத்திலிருந்து 3-25சதம் முதல் 3-50 சதம் வரை குறைந்துள்ளது. (இ)

## 'பாலா' அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் நா. பாலசுப்பிரமணியத்தின் நினைவு அஞ்சலிக்கூட்டம் நாளை யாழ் வீரசிங்கம், மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடக்கவிருக்கும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சி முதல்வர் திரு. ஏ. அமிர்தலிங்கம், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம், பிரதி கல்விமாஅதிபர் திரு. ஜோர்ஜ் மெண்டிஸ், கல்வி அமைச்சின் கணக்காளர் திரு. கே. ஆர். எம். புஞ்சிநிலாமே, வடமாநில கல்வி பணிப்பாளர் திரு. தா. மாணிக்கவாசகர், மேலதிக கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன், இலங்கை ஆசிரியர் சங்கதலைவர் திரு. எச். என். பெர்ஞண்டோ ஜாதிகஅத்திபாபன் சங்கசெயலாளர் திரு. டீ. தர்மசேனு, ஜாதிக குரு சங்கமய செயலாளர் திரு. பீ. குணவர்த்தனு, இஸ்லாமிய ஆசிரிய சங்க செயலாளர் ஜனுப் ஏ. எல். எம். ராசிக், அரசாங்க எழுதுவினைஞர் சங்க பொதுச்செயலாளர் திரு. கே. கே. உருத்திரன், மொழிவழி தொழிற்சங்க கூட்டணி செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன், மற்றும் கூட்டணி எம். பி.க்களும் உரைநிகழ்த்துவார்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரோமிக்கோ பேச்சுவார்த்தை

# சோவியத் துருப்புகள் வெளியேற்றம்: பாரதம் வலியுறுத்தவில்லை?

## ஆப்கானில் பாக். ஊடுருவலுக்கு கண்டனம்!

(புதுடில்லி)

இந்தியத் தலைவர்களுடன் தாம் நடாத்தியபேச்சுவார்த்தைகள் மிகவும் பலனுள்ளதாக அமைந்திருந்தனஎன்று சோவியத்யூனியன்வெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோ, திருப்தி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து இந்தியத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த கடந்த செவ்வாய்க்கிழமை பாரதம் வந்த திரு. குரோமிக்கோ, பாரதப்பிரதமருடனும் வெளிவிவகாரஅமைச்சருடனும் விரிவாகப்பேச்சுக்கள்நடத்தினர்.

இவரைக் கௌரவிக்கும் முகமாக நேற்று முன்தினமிரவு இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இரவுவிருந்தளித்தார். அப்பொழுது திரு. குரோமிக்கோ பேசுகையில், மேலும்கூறியதாவது:

''பாரதத் தலைவர்களுடன் நான் நடத்திய பேச்சுக்கள் மிகவும்திருப்திகரமாக அமைந்திருந்தன. இரண்டு நாடுகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக இப்பேச்சுக்கள் அமைந்திருந்தன.

''சர்வதேச பதட்ட நிலைமையைக் குறைக்கவேண்டும் என்பதை இரண்டு நாடுகளின் இலட்சியமாகும். இப்பேச்சுவார்த்தைகளின்மூலம் இருதரப்பு உறவுகளும் மேலும் வளர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'' என்று தெரிவித்த திரு. குரோமிக்கோ-

''ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவல்நடத்துவதைபாகிஸ்தான் உடனடியாக நிறுத்த வேண்டும். பாகிஸ்தான் தனது அண்டை நாடுகளுடன் நல்ல உறவு வைத்திருக்கவேண்டும்'' என்று வலியுறுத்திக்கூறினர்.

### இந்தியா வற்புறுத்தவில்லை?

இதற்கிடையே, ஆப்கானிஸ்தானில் இப்பொழுது நிலைகொண்டிருக்கும் சோவியத் துருப்புக்களை வெளியேற்றுவதற்கான வற்புறுத்தல் எதுவும் இந்தியாவிடமிருந்து வெளிவராமலே, பாரதத் தலைவர்கள்-குரோமிக்கோ பேச்சுவார்த்தைகள் முடிவடைந்துவிட்டதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## நீதவான் முன்னிலையில் 'கஞ்சா' எரிக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.முஸ்லிம்வட்டாரத்தில் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட இரண்டு பெட்டி கஞ்சா, யாழ். மேலதிக நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் வைத்து எரிக்கப்பட்டது.

மகரூப் என்பரிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சாவும், மற்றொரு வழக்கில் கைப்பற்றப்பட்ட கஞ்சாவும் நேற்று எரிக்கப்பட்டது.

இவ்வழக்கில் எதிரிக்கு நீதவான் 100 ரூபா அபராதம் விதித்து, கஞ்சாவை உடனடியாக எரிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து பொலிஸார், மேலதிகநீதவான்முன்னிலையில் கஞ்சாவை எரித்தனர் (கு)

ஈரான்தென்மேற்கில்:

## பெருவெள்ளம் நூறு பேர் பலி!

(தெஹ்ரான்)

ஈரானின் தென்மேற்கு மாகாணத்தில் ஏற்பட்டபெருவெள்ளத்தினுல் நூற்றுக்கு மதிகமானவர்கள் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையாகப்பெய்த மழையைத் தொடர்ந்து பெருவெள்ளம் ஏற்பட்டதென்றும் வெள்ளத்தினுல் பலகிராமங்கள் துண்டிக்கப்பட்டிருக்கும்அதேநேரத்தில், வெள்ளம் வேறுபல கிராமங்களுக்கும் ஊடுருவிச்செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

......

### 2000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் 40 குத்தல் டைனமைட் திரி கைப்பற்றப்பட்டது. விசாரணை நடத்திய சுங்க சேகரிப்பாளர் திரு. செனரத்தினு உரிமையாளருக்கு 2000 ரூபா அபராதம் விதித்தார். (க)

ஆப்கானிஸ்தான்

### பாகிஸ்தான் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புக்கள் முழுமையாக வெளியேற்றப்பட்ட பின்னரே ஆப்கானிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும் என்று பாகிஸ்தான் நேற்று அறிவித்துள்ளது.

## மேற்கிந்தியா நியுஸிலாந்திடம் தோல்வி

டயூநிடின், பெப். 14

நியூஸிலாந்து - மேற்கிந்திய முதலாவது டெஸ்டில், நியூஸிலாந்துக் கோஷ்டி 1 விக்கட்டால் வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து வேகப்பந்து வீச்சு வீரர் றிச்சர்ட் காட்லி முதல் இன்னிங்ஸில் 5 விக்கட்டுகளேயும் 2 வது இன்னிங்ஸில் 7 விக்கட்டுகளேயும் கைப்பற்றி சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசைப் பெற்றுக் கொண்டார். இவர் முதல் இன்னிங்ஸில் 55 ஓட்டங்களைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய வீரர் ஹெய்ன்ஸ் 2 வது இன்னிங்ஸில் 105 ஓட்டங்களைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது,

ஸ்கோர் விபரம்:- மேற்கிந்தியா-140, 212. நியூஸிலாந்து-249, 9-104. (இ)

# நாளை நிகழும் சூரிய கிரகணம்!

## பார்த்தால் கண்பா[illegible]வை இழக்கலாம்!

(புதுடி[illegible])

நாளை சனிக்கிழமை ஏற்படும் சூரியகிரகணத்தை பார்க்கவேண்டாம் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்! வேறு உதவிகளைக்கொண்டுகூட கிரகணத்தைப்பார்க்க முயற்சிக்கவேண்டாம் என்றும் விஞ்ஞானிகள் கேட்டுள்ளனர்!

இந்தியாவின் மேற்குப்பகுதியிலிருந்து கிழக்குக்கரையோரங்கள்வரை சூரியகிரகணத்தை தெளிவாகக் காணக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதால், திருவனந்தபுரம் விண்வெளிநிலையத்தில் பிரிட்டன், ஜப்பான் மற்றும் இந்தியாவைச்சேர்ந்த நாற்பது பிரபல விஞ்ஞானிகள் கூடியுள்ளனர்.

சூரியகிரகணம்சம்பந்தமாக இந்திய சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், சூரியகிரகணத்தைப்பார்க்க முயற்சிக்கவேண்டாமென்றும், குறிப்பாகக் குழந்தைகளை கடுமையாகக் கண்காணிக்கும்படியும் கோரியுள்ளது.

''கிரகணத்தின்போது சூரியனின் ஒளி மங்கலாக இருந்தாலும், கதிரின் உஷ்ணம் கடுமையாகவிருக்கும். இதன்மூலம் கண்களின் விழித்திரை பாதிக்கப்படும். பொதுவாக இப்பாதிப்பு தற்காலிகமாக இருந்தாலும் காலப்போக்கில் சில சமயங்களில் பார்வையை முற்றாக இழக்கவும் நேரிடலாம். ஆகையால் சூரியகிரகணத்தைப் பார்ப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்'' என்று சுகாதார அமைச்சுக்குறிப்பு வலியுறுத்துகிறது.

சூரியகிரகணத்தின்போது சூரியனில் ஏற்படும் பல்வேறு மாறுதல்கள், மற்றும் சாற்றின் வேகம்பற்றி விஞ்ஞானிகள் நுணுக்கமாக ஆராய்வார்கள் நாளையதினம் நிகழும் புவியியல் மாறுதல்கள் பற்றிக் கண்டறியும்பொருட்டு, திருவனந்தபுரத்திலுள்ள விண்வெளி ஆய்வுகூடத்திலிருந்து ஏழு ராக்கெட்டுகள் செலுத்தப்படவிருக்கின்றன.

## இன்றைய பலன்

மாசிமாதம் 3-ம் திகதி

(15-2-1980) வெள்ளிக்கிழமை

மேடம்;- வீட்டில் சுபகாரியங்கள்இடம்பெறும். தொழில் நலனுடன் வாழ்விலும் சுகம் காணும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும்.

இடபம்:- விருந்தினர் வருகை மகிழ்ச்சிதரும் தொழில்துறையிலும் உற்சாகம் பெருகும். பூமிச்சிறப்புமுண்டு.

மிதுனம்:- அதிக சிந்தனை அமைதியைக் குலைக்கும். எதிரிகள் மத்தியில் பொறுமையைக் கடைப்பிடிக்கவும் வாகனச் சாரதிகள் நிதானம் வேண்டும்.

கடகம்:- எழுத்தாளர்களுக்குச் சிறப்பானதினம். முதியவர் ஆசியுண்டு. இல்லத்திலும் இனிமை தவழும் களவில் திரவழிச் சுகமுண்டு.

சிங்கம்:- வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். விபத்து மேற்படலாம் எதிலும் விழிப்புணர்ச்சியுடன் செயலாற்றவும்.

கன்னி:- பூமிப் பிணக்கில் சமரசமுடிவுகாணப்படும், பெற்றோர் ஆதரவும் கிடைக்கும். பொருள் வரவுமுண்டு தரும காரியங்களிலும் மனம்நாடும்.

துலாம்:- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். மகிழ்ச்சி தரும் பிரயாணமும் மேற்கொள்ளப்படும்.

விருச்சிகம்:- வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சி எடுப்பீர்கள். தானிய விருத்தியுண்டு தன் தொழில் சிறப்புமுண்டு. முன்னேற்றமானதினம்.

தனுசு:- பிரயாணத்தின் போது பொருள்தவறக்கூடும். பாதையிலும் பழுதுண்டு. தொழிலிலும் தொல்லையுண்டு. கவனம் வேண்டும்.

மகரம்;- தொழிலிலும் பிணக்குகள் தோன்றலாம். குடும்பப் பிரச்னைகளிலும் நிதானம் வேண்டும். கருத்து வேற்றுமைகளை தவிர்க்கவும்.

(5-ம் பக்கம் பார்க்க)

# "கறுப்பு இன மக்களைப் பாதிக்கும் பிரிட்டனின் புதிய குடியேற்ற விதிகள்"

லண்டன், பெப். 14

பிரிட்டன் தனது குடியேற்ற விதிகளை மாற்றியமைக்கும் ஆலோசனைகளை தற்போது ஆராய்ந்து வருகிறது. இது பற்றியவெள்ளையறிக்கைஒன்று ஏற்கனவே அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்கள் மீது மேலும் அதிக கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதே இதன் நோக்கம்.

இவ்வாறு 'லேபர் மன்த்லி' என்ற சஞ்சிகையில் திரு. விஷ்ணு சர்மா எழுதியுள்ளார்.

அவர் மேலும் கூறுவதாவது:

''இப்புதிய ஆலோசனைகள் பெண்களையே மிக மோசமாகப் பாதிக்கும். அவர்கள் தமது கணவரையோ, மணம் முடிக்கவிருப்பவர்களையோ பிரிட்டனில் குடியிருப்பதற்கு அழைக்க முடியாது. ஆனல் ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகளில் உள்ள கணவர்கள் மட்டும் பிரிட்டனில் குடியேறலாம். அதாவது கறுப்பர்களுக்கு இடமில்லை; வெள்ளையர்களுக்கு மட்டுமே இடமுண்டு என்பதே இதன் அர்த்தம்.

''இது நிற, இன, மத வேறுபாடின்றி சகல பிரஜைகளுக்கும் இங்கு குடியிருப்பதற்கு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கன்சர்வேட்டிவ் கட்சியின் தேர்தல் அறிக்கைக்கு முற்றிலும் முரணானதே.

இங்கு தொழிலாளர்களாகப் பணிபுரியும் வெளிநாட்டவர்கள் இப்புதிய சட்டங்களால் பெரிதும் பாதிக்கப்படவுள்ளனர். உழைப்புப் 'பெர்மிட்' கிடைத்து நான்காண்டுகளாக இங்கு உழைப்பவர்கள், தாம் வேலைசெய்யும் ஸ்தாபனம் தம்மைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்புகிறது என்று ஆதாரம் காட்டினுல் மட்டுமே [illegible] கல்விக் கட்டணம் அதிகரித்[illegible] தனைத் தொடர்ந்து தமது கணவரது படிப்புக்கு உதவும் வகையில் வேலை செய்வதற்கு வெளிநாட்டு மாணவர்களது மனைவிமார் அனுமதிக்கப்படமாட்டார்கள். அதேவேளையில் தமது படிப்பைத் தொடர முடியாதிருக்கும் மாணவர்கள் உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்''

புதிய விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு குடியேற்ற அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிடும் கட்டுரையாளர் கருத்திலும் செயலிலும் பாகுபாடுகளைப் பிரதிபலிக்கும் புதிய சட்டங்களை ஜனநாயகத்திலும் மனித உரிமைகளிலும் நம்பிக்கை கொண்டவர்களனைவரும்எதிர்க்கவேண்டும் என்று வலியுறுத்துகிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-லக்ஷ்மி நடித்த
பெண் தெய்வம்
(புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - பத்மினி
அரசிளங்குமரி

## ஆலயத்தில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு புதருவை சித்தி விநாயகர் ஆலயத்தில் இரவு வேளையில் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கு அம்மன் விக்கிரகத்திற்கு அணிவிக்கப்பட்டிருந்த சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர். கடந்த 8ம் திகதி இரவு இத்துணிகரத் திருட்டு நடைபெற்றது. (அ)

REGAL (Jaffna) Phone: 60
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P m
For the first time in 42 years. One film Sweeps, all the Major Academy Awards.
WINNER OF 5 ACADEMY AWARDS
Best Picture
JACK NICHOLSON
ONE FLEWOVER THE CUCKOO'S NEST
Adults only Color

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00, 9-30
2-nd Crowded Grizzly Week
"GRIZZLY"
HORROR! TERROR!! SUSPENSE!!! Scope-Color-
- More Suitable For Adults -

SRIDHAR JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 and 9-30 p.m.
That "Walking Tall" man is back!
Joe Dow Baker is back As Rugged Hero in
FRAMED
(Adults only)
Coming Soon: BADGE 373


வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-சரோஜாதேவி நடித்த
ஆலயமணி (புத்தம்புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30 & 9-30
போன்: 7693
தெய்வ மகன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
முத்துராமன் - ஸ்ரீவித்யா - சுந்தரராஜன்
காலங்களில் அவள் வசந்தம்

கடைசி வாரம்
ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
காட்சிக்குக் காட்சி அலைமோதும் மங்கையர் கூட்டம்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த சிறந்த காதல் காவியம்
தேவதாஸ்
யாழ். நகரில் தேவதாஸ் திரையிடப்படும் கடைசி சந்தர்ப்பம் இதுவே. கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.



"ஈழநாடு" வெற்றிக் கிண்ணம்

# காங்கேசன் 'யங்ஸ்ரேயல்' நடத்திய உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுச்கழகத்தின் பதினொராவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி "ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்திற்காகவும் ஏனைய கேடயங்களுக்காகவும் நடைபெற்றுவந்த உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் கடந்த வாரஇறுதியில் நடைபெற்றன. இச்சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த அறுபத்திநான்கு கழகங்கங்கள் பங்குபற்றியிருந்தன. இச்சுற்றுப்போட்டி 7 வீரர், 11 வீரர், இரண்டாம்பிரிவு, மூன்றும் பிரிவுஎன நான்கு பிரிவுகளாக நடாத்தப்பட்டது. முதலாம் பிரிவு ஏழுபேர் கொண்ட போட்டியில் குருநகர் சீநோர் விளையாட்டுக்கழகமும் சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. இப்போட்டிக்கு காங்கேசன்துறை பட்டின சபை விசேட ஆணையாளர் திரு. க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துபோட்டியை ஆரம்பித்துவைத்தார்.

இரண்டாம் பிரிவுப்போட்டியில் காங்கேசன்துறை வொன்றெஸ்ட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மோதியது காங்கேசன்துறை சிமெந்துதொழிற்சாலை தொழில் அதிபர் திரு. எஸ். சூரியதேவா இப்போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்து விளையாட்டு வீரர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார். இப்போட்டிகளில் குருநகர் சீநோர் கழகமும், சிறுவிளான் ஞானோதய விளையாட்டுக்கழகமும் இணைப்புச் சாம்பியன்களாகவும், இளவாலை உதயசூரியன் விளையாட்டுக்கழகம், வொன்றெஸ்ட் கழகத்தை 3-2 கோல்களினால் வெற்றியீட்டி சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

இரண்டாம்நாள் நடைபெற்ற முதலாவது போட்டியில் மூன்றும் பிரிவில் மாதகல் செல்வா இளைஞர் விளையாட்டுக்கழகத்தைஎதிர்த்துஊறணி புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகம் மோதி இறுதியில் மாதகல் செல்வா கோஷ்டியினர் 1-0 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு சிமெந்துத்தொழிற்சாலை அதிகாரி திரு. அ. அன்ரன் பிரதம்விருந்தினராகக் கலந்து கொண்டார். இரண்டாவதாக நடைபெற்ற முதலாம் பிரிவு பதினொருபேர்கொண்ட போட்டியில் சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுக் கழகமும் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இப்போட்டிக்கு காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. மேர்வின் பெர்ணன்டோ பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு வீரர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டார். இப்போட்டி ஆரம்பமான நேரம்முதல் இறுதிவரை ஒருவரை ஒருவர் விட்டுக்கொடாமல் விளையாடியதினால் போட்டி விறுவிறுப்பாக இருந்தது. எனினும் இறுதியில் சிறுவிளான் கோஷ்டி 3-2 கோல்களால் வெற்றியீட்டியது. இபபோட்டிகளுக்கு திருவாளர்கள். க. தனபாலசிங்கம், க. சிவராஜா ஆகியோர் நடுநிலைமை வகித்தனர். கழகத்தலைவர் திரு. க. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் திரு. மேர்வின் பெர்ணன்டோ உரையாற்றுகையில்:

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிதோல்வியை எதிர்பார்த்துப் பங்குபற்றக்கூடாதென்றும் இவ்வாறுனபோட்டிகளில் பங்குபற்றுவதன் மூலம் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை பலப்படுத்த முடியும் என்றார். தனது பொலிஸ் பகுதியில்இவ்வாறுன ஒரு விளையாட்டுக்கழகம் இருப்பதில்தான் பெருமகிழ்ச்சி அடைவதாகவும், விளையாட்டுத்துறையில் யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழகம் எடுத்து வரும் முயற்சிகளையும் பாராட்டினார்.

முதலாம் பிரிவில் பதினொருபேர் கொண்ட போட்டியில் சாம்பியன்களாகத்தெரிவுசெய்யப்பட்ட சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுக்கழகத்திற்கு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 'யாழ். மெற்றல்' வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டது. ஏழுபேர் கொண்ட போட்டியில் வெற்றிபெற்ற குருநகர் சீநோர் கழகத்திற்கு 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது. ஏனைய வெற்றிகளைப் பெற்ற இரண்டாம், மூன்றும் பிரிவுக்கோஷ்டிகளுக்கு திரு. க. ஜெயபாலசிங்கம் அன்பளிப்புச் செய்த 'நாகப்பா ஞாபகார்த்தக் கிண்ணமும், திருமதி க. அருளம்பலம் குடும்பத்தினர் அன்பளிப்புச்செய்த அருளம்பலம் ஞாபார்த்த வெற்றிக் கிண்ணமும், வைத்திய கலாநிதி ரி. இராஜேந்திரம், திரு. கே. வி. துரைச்சாமி, திரு. ரி. எம். அமிட் ஆகியோர் அன்பளிப்புச்செய்த வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

## இன்றைய...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்:- பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித் தரும். நல்வாழ்வுமுண்டு நல்லோர்கள் ஆசியுமுண்டு. தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

மீனம்: தூக்கம் கெடும், மனவிரக்தி தென்படும், சாரதிகள் கவனம் செலுத்தவும் தொழில்விடயத்தில்பொறுமையுணர்ச்சியைக் கடைப்பிடிக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன்-E.V. சரோஜா
வீரத்திருமகன்
(புதிய பிரதி)

## அனுமதியின்றி கள் சீவுபவர்கள் நடவடிக்கை எடுக்கப்படும்

(உடுப்பிட்டி)

இவ்வருடம் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கருப்பநீர் சேகரிப்பவர்கள், கள்சீவுபவர்கள் அதற்கான அனுமதியை இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. எம். தம்பிமுத்து அறிவித்துள்ளார்.

கள் சீவுபவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை கட்டைவேலி உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தில் மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அனுமதிப் பத்திரமின்றி கள் சீவுபவர்கள் மீதும், அனுமதிப் பத்திரமின்றி கள் சீவுவதற்கு அனுமதிக்கும் காணிச்சொந்தக்காரர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

......

## கொழும்பில் மகாநாடு

[உடுப்பிட்டி]

தமிழ், சிங்கள மக்களிடையே நல்லுறவையும் இன ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் முகமாக பௌத்த மதத் தலைவர்கள், கிறிஸ்தவ, கத்தோலிக்க மதத் தலைவர்கள், ... விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் ஆகியோரைக்கொண்ட மகாநாடு இம்மாதம் 16 ம், 17 ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டிற்கான ஒழுங்குகளை கிறிஸ்தவ, கத்தோலிக்க தலைமைப்பீடங்கள் செய்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும்
சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள...



டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல்மாடி
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## அ. இ. அ. தி. மு. க. பலம் குறைந்தது

[சென்னை]

ராஜ்யசபா அ. இ. அ. தி. மு. கழக உறுப்பினர் திரு. வி. வெங்காவும், தமிழ்நாடுசட்ட மேலவை அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர் திரு. ஏ. கே. வில்வமும் நேற்று தி. மு. க. வில் சேர்ந்து கொண்டனர். ராஜ்யசபாவில் தி. மு. க. பலம் 06 ஆக உயர, அ. தி. மு. க. வின் பலம் 06 ஆகக் குறைந்துள்ளது!


எண்ணம் போல்
வர்ண நிறங்களில்
இலகுவாக கிடைக்கிறது

**HONDA**

C 70 C 90
C 250 C 350

மோட்டார் சைக்கிள்கள்
இப்போது கிடைக்கிறது.
இன்றே பதிவுசெய்யுங்கள்

பல்க்கன் ஏஜென்சி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685


# ஏழு பிள்ளைகளின் தந்தை தாக்குதலுக்குப் பலி!

## உடையார்கட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

"மாமாவின் தலையில் யோகானந்தன் பொல்லால் அடித்தார். மாமா வேலியில் இருந்து தடியை முறித்து யோகானந்தனை அடித்தார். அப்போ யோகானந்தன் கையில் வைத்திருந்த தடியால் மாமாவைத் தாக்கினர். மாமா நிலத்தில் வீழ்ந்தார்.

புதுக்குடியிருப்பு உடையார் கட்டைச் சேர்ந்த 7 பிள்ளைகளுக்குத் தந்தையான கதிரிப்பிள்ளை கிருஷ்ணனந்தனின் (40 வயது) மரணவிசாரணையில் சாட்சியமளித்த இறந்தவரின் மருமகன் வேலுப்பிள்ளை இராசரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ் நீதவான் திரு. ஆர். இராஜசிங்கம் முன்னிலையில், யாழ் ஆஸ்பத்திரியில் இந்த மரண விசாரணை நடைபெற்றது. முல்லைத்தீவு உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்தேவல, சார்ஜன் அன்ரன் ஆகியோர் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

வேலுப்பிள்ளை இராசரத்தினம் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:

"வயலுக்குப் போன மாமி கமலா தேவியையும் அவர்களது பிள்ளைகளான குணேஸ்வரன், முருகானந்தன், விமலேசன் ஆகியோரையும் பெரிய மாமாவின் மக்கள் தாக்கப் போவதாக ஒருவர் வந்து மாமாவுக்குத் தெரிவித்தார். நானும் மாமாவும், மாமியையும், பிள்ளைகளையும் வீட்டிற்கு அழைத்து வருவதற்காக வயலுக்குச் சென்றோம். செல்லும் வழியில் பெரிய மா ாவின் மக்களான வேகானந்தன் (20 வயது) யோகானந்தன் (18 வயது) ஆகியோர் நின்றனர்.

"யோகானந்தன் மாமாவின் தலையில் பொல்லால் அடித்தார். மாமா வேலியில் இருந்த தடியை முறித்து யோகானந்தனை அடித்தார். அப்போது வேகானந்தன் வைத்திருந்த பொல்லால் மாமாவைத் தாக்கினர். மாமா நிலத்தில் விழுந்துவிட்டார். அவ்வேளை கிளி என்பவர் அவ்விடத்திற்கு வந்து யோகானந்தனின் கையில் இருந்த பொல்லைப் பறித்துவிட்டார். அப்போது வயலிலிருந்து மாமியும், பிள்ளைகளும் அவ்விடத்திற்கு வந்துவிட்டனர்.

"தலையில் பலத்த காயங்களுடன் கிடந்த மாமாவை வண்டில் ஒன்றில் ஏற்றிக் கொண்டு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு அங்கிருந்து முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றோம். முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் மாமாவை அனுமதித்துவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின் மாமாவை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றதாகவும், அங்கு இறந்துவிட்டதாகவும் பின்னர் கேள்விப்பட்டேன். மரணமான மாமா உடையார்கட்டில் உள்ள உப அஞ்சல்நிலையத்தில் அதிபராகக் கடமையாற்றியவர். கடந்த சில மாதங்களாக அவர் தற்காலிக வேலைநீக்கஞ்செய்யப்பட்டு வீட்டில் இருந்தார். வீட்டில் இருக்கும்போது வயல் தோட்டம் ஆகியவற்றைச் செய்துவந்தார். அவ்வேளையில் தான் மாமா குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது" என்றார்.

இறந்தவரின் சகோதரர் சி. பேரம்பலமும் சாட்சியமளித்தார்.

மரண விசாரணையின்போது நீதவான் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறும் பணித்துத் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 27ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

தலைமறைவாகியுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்து கோர்ட்டில் ஆஜர் செய்யுமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். முல்லைத்தீவு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்தேவல, சார்ஜன்ட் அன்ரன் ஆகியோர் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (கொ)

# சுயமரியாதை இயக்க பொன்விழா

(யாழ்ப்பாணம்)

சுயமரியாதை இயக்கத்தின் 50 வது ஆண்டு நிறைவுப் பொன்விழா, குருநகர் அண்ணா சிலை முன்றலில் நாளை மாலை சிறப்பாக நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட அண்ணா தி. மு. க. தலைவர் திரு. யே. டியூக் தலைமையில் நடைபெறும் இப்பொன்விழாவில் தமிழ்நாடு சுந்தரபாண்டியன் பட்டணம் அண்ணா தி. மு. க. அமைப்பாளர் 'புரட்சித் தென்றல்' ஜே. எஸ். சாதிக் (யகுபர் சாதிக்), அனைத்து இலங்கை அண்ணா தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ஏ. நெய்னார், யாழ். எம். பி. வெ. யோகேஸ்வரன், திரைப்பட நடிகர் திரு. எம். உதயகுமார், மற்றும் திரு. எஸ். யேசுதாசன், திரு. எஸ். தியாகராசா, ஜனாப் மன்சூர், அனைத்து இலங்கை அண்ணா தி. மு. க. கவிஞர் திரு. ராகவன் ஆகியோர் சிறப்புரையாற்றுவார்கள்.

ஈ. வெ. ரா. பெரியாரும், அறிஞர் அண்ணாவும் வளர்த்த சுயமரியாதை இயக்கப் பொன் விழாவில் பிரதம அதிதியாக திரு. எம். எஸ். பேரின்பநாயகம் கலந்துகொள்கிறார். யாழ். மாவட்ட அ. தி. மு. க. நிர்வாகக் குழுத் தலைவர் திரு. யோ. டானியல் வரவேற்புரை நிகழ்த்துவார். (வெ)

### உரும்பராய் கொள்ளை வழக்கு

# எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் தாலிக்கொடி கொள்ளை வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டனை விதிப்பது இம்மாதம் 27ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ். மேலதிக நீதிவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

உரும்பராய் கிழக்கில் இம்மாதம் 12ம் தேதி மேரிசுசிலாவுக்கு சொந்தமான 9,500 ரூபா பெறுமதியான தாலி, சங்கிலி, காப்பை கொள்ளையடித்ததாக, ஆறுமுகம் ஸ்ரீதரன் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. பி. சுகுணேந்திரன், யாழ். மேலதிக நீதிமன்றத்தில் எதிரியை ஆஜர் செய்தனர்.

எதிர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யுமாறும் எதிரியை றிமாண்டில்வைக்குமாறும் நீதவான் கட்டளையிட்டார்.

பொலிசாரினால்மீட்கப்பட்ட நகைகளை, மேரிசுசிலாவும் அவரது கணவன் லோ. தவரத்தினமும் கூட்டாக 15,000 ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறும் நீதவான் கட்டளையிட்டார். (கு)

## அமைச்சரவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

- ஜனாப் எம். ஏ. அப்துல் மஜீத்- மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சு.
- திரு. ஹரல்ட் ஹேரத்- ஜனதா தோட்ட அபிவிருத்தி அமைச்சு.
- திரு. பி. எல். விஜயமானே- அரசாங்கப் பெருந் தோட்டங்கள் அமைச்சு.
- திரு. ஹரேந்திர கொரியா- பொது நிர்வாகம்.
- திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா- நெடுஞ் சாலைகள்.
- திரு. ஜி. பி. புஞ்சி நிலமே- பிராந்தியஅபிவிருத்தி அமைச்சு.
- திரு. ஏ. எம். ஆர். டி. அத்தநாயக்கா- உயர் கல்வி.
- வீரவன்னி சமரவீர- கல்வி.
- திரு. பிரேமரத்ன குணசேகர- சுகாதாரம்.

ஏனைய அமைச்சுக்களில் முன்னைய பிரதியமைச்சர்களே தொடர்ந்து பதவியாற்றிவருவார்கள்.

### சுதேச வைத்திய அமைச்சர்

திரு. தர்மசேன ஆட்டிகல சுதேச வைத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார், இவர் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராவார்.

## வலதுகுறைந்தோர் ஆண்டாக 1981 பிரகடனம்

(கொழும்பு)

1981ம் ஆண்டை வலது குறைந்தோருக்கான சர்வதேச ஆண்டாக ஐ. நா. சபை பிரகடனப்படுத்தியுள்ளது உலகில் 40 கோடி அங்கவீனர்கள் இருப்பதாக அறியப்படுகிறது. (நா)


மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை
திருச்சிராப்பள்ளி,
மதுரை, பம்பாய்,
கோலாலம்பூர்,
சிங்கப்பூர், பரிஸ்,
லண்டன், துபாய்,
சவூதி அரேபியா,
கனடா
ஆகிய நாடுகளுக்கு
அழைத்துச் செல்ல

மற்றும்
பாஸ்போட்,
அமெரிக்கன்
டிறவலர்ஸ் செக்
உலகின் எப்பகுதிக்கும்
விமான டிக்கட்,
சுற்றுலாக்கள்
ஆகிய உங்கள்
தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில்
ஒழுங்குசெய்துகொள்ள
இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால்பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது


## மரண அறிவித்தல்

### சி. கா. ஆறுமுகம்

டிக்கோயா, யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் திரு. சி. கா. ஆறுமுகம் காலமானார். இவர் வைகைலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராமலிங்கம், அட்டன் மகாலட்சுமி ஸ்டோர்ஸ் உரிமையாளர் முருகேசு ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று 15-2-80 வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்:
இ. திருவாதிரை

4968

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் பெப்ரவரி மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka under No.QE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org